தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, தை 17, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜனவரி 30, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> *“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.”*

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகத்து இன்ப வாழ்க்கை இல்லை. அதேபோல் உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை.

1. இரங்கற்குறிப்பு

ஜம்மு–காஷ்மீர் மாநிலம், குரேஷ் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய இராணுவ வீரர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *26–1–2017 அன்று ஜம்மு–காஷ்மீர் மாநிலம், குரேஷ் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள், சிப்பாய் B. இளவரசன் மற்றும் சிப்பாய் சுந்தரபாண்டி உட்பட, 15 இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்ற துயர செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இந்தத் துயரச் சம்பவத்தால் தங்களது இன்னுயிரை இழந்திட்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

இத்துயரச் சம்பவத்தில் உயிர்நீத்த தமிழகத்தைச் சேர்ந்த இவ்விரு இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உயர்த்தப்பட்ட கருணைத் தொகையான, தலா 20 இலட்சம் ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்துயரச் சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

இருவழிச் சாலை

***8168—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள ஆனைமலை—பூலாங்கிணறு சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?